தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005

# தமிழ்நாடு தகவல் ஆணையம்

பிளாக் எண்.19, அரசு பண்ணை இல்லம், பேன்பேட், நந்தனம், சென்னை-600 035. தொலைபேசி எண்.044-2951 5590

**ஆணை நாள் 15.07.2026**

**முன்னிலை**

**முனைவர் அதுல்ய மிஸ்ரா, இ.ஆ.ப. (ஓய்வு)**
**மாநில தகவல் ஆணையர்**

*****

**வழக்கு எண்.SA 3181/SCIC/2024**

திரு.வி.கிருபானந்தன் - மேல்முறையீட்டாளர்
எண்.20/439, அயோத்தியா நகர்
திருவல்லிக்கேணி
சென்னை - 600 005.
கைபேசி- 9600060390.

/எதிர்/

பொதுத் தகவல் அலுவலர் / - பொது அதிகார அமைப்பு
செயற்பொறியாளர்
மண்டலம் -5,
No.61, Basin Bridge Road,
Chennai - 600001.

## ஆணை

| | | |
|---|---|---|
| 1. | **மனுதாரரின் தகவல் பெறும் உரிமைச் சட்ட மனு** | **07.09.2023** |
| 2. | மனுதாரரின் முதல் மேல்முறையீட்டு மனு | 22.10.2023 |
| 3. | மனுதாரரின் இரண்டாம் மேல்முறையீட்டு மனு | 06.03.2024 |
| 4. | பின்னர் பொதுத் தகவல் அலுவலரின் பதில் | 09.05.2024 |
| 5. | மனுதாரரின் ஆட்சேபனை மனு | 08.11.2024 |

மனுதாரர், தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, பிரிவு 6(1)-ன் கீழ் 07/09/2023 நாளிட்ட மனுவை பொதுத் தகவல் அலுவலர் / சென்னை மாநகராட்சி அலுவலகம், ரிப்பன் பில்டிங், சென்னை-3 அவர்களுக்கு அனுப்பி, அதில் "சென்னை-14, மண்டலம்-5, வார்டு-63, பழைய எண்.47, செல்லப்பிள்ளையார் கோவில் தெரு, இராயப்பேட்டை இடத்தில் கட்டப்படும் புதிய கட்டிடம் தொடர்பாக - மேற்சொன்ன வீட்டு மனையில் கட்டியுள்ள அடுக்கு மாடி கட்டிடத்தின் கட்டிட திட்ட வரைபடம் (Blue Print) நகல் மற்றும் கட்டிட திட்ட வரைபடம் வழங்கிய அதிகாரியின் பெயர்,

பதவி அலுவலக முகவரி மற்றும் அலைபேசி எண்களை வழங்கும்படி கேட்டுக் கொள்கிறேன்." என்பன போன்று 5 (ஐந்து) இனங்களில் தகவல்களை அளிக்கக் கோரியுள்ளார்.

2. இன்றைய (15/07/2026) ஆணையத்தின் விசாரணையின் போது மனுதாரர் திரு.வி.கிருபானந்தன் அவர்கள் ஆஜராகவில்லை. தமிழ்நாடு தகவல் ஆணையம் (மேல்முறையீட்டு விதிகள், 2012) விதி 7(2)-ன்படி மனுதாரர் விசாரணைக்கு ஆஜராவது கட்டாயமாகும். மனுதாரரின் வருகையின்மை ஆணையத்தால் பதிவு செய்யப்படுகிறது. பொது அதிகார அமைப்பின் சார்பில், தமிழ்நாடு தகவல் ஆணையம் (மேல்முறையீட்டு நடைமுறை) விதிகள், 2012 விதி 8(2)-ன்படி அங்கீகாரம் பெற்ற பிரதிநிதியாக, திரு.K.சிவக்குமார், இளநிலை பொறியாளர், மண்டலம்-5, பெருநகர சென்னை மாநகராட்சி, சென்னை அவர்கள் உரிய அங்கீகார கடிதத்துடன் ஆஜராகி மனுதாரருக்கு 09/05/2024 தேதியிட்டு தகவல்களை அனுப்பியுள்ளதாகத் தெரிவித்ததோடு, மனுதாரர் குறிப்பிடும் கட்டிட உரிமையாளருக்கு விதிமீறல் அறிவிப்பும் (Deviation Notice) அனுப்பப்பட்டிருப்பதாகத் தெரிவித்தார். **ஆணையத்தின் அழைப்பாணை அனுப்பப்பட்டு, நேரடி விசாரணையில் பங்கேற்று தனது வாதுரையினை பதிவு செய்ய வாய்ப்பளிக்கப்பட்டும், இன்றைய விசாரணையில் மனுதாரர் ஆஜராகவில்லை. எனவே, இவ்விரண்டாம் மேல்முறையீட்டு மனுவின் மீதான வழக்கின் விசாரணை இத்துடன் முற்றாக்கம் செய்யப்படுகிறது.**

**ஒம்./-(அதுல்ய மிஸ்ரா)**
**மாநில தகவல் ஆணையர்**

**//ஆணைப்படி//**

**உதவி பதிவாளர்**

**<u>வழக்கு எண்.SA 3181/SCIC/2024</u>**

**பெறுநர்**

**<u>பொது அதிகார அமைப்பு</u>**

பொதுத் தகவல் அலுவலர் /
செயற்பொறியாளர்
மண்டலம் -5,
No.61, Basin Bridge Road,
Chennai - 600001.

**<u>மேல்முறையீட்டாளர்</u>**

திரு.வி.கிருபானந்தன்
எண்.20/439, அயோத்தியா நகர்
திருவல்லிக்கேணி
சென்னை - 600 005.
கைபேசி- 9600060390.

RG/Sr.PC